**தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 600 006.**
**ந.க.எண்.025400/டி1/2014, நாள் 15.10.2014**

-----

பொருள்: தொடக்கக்கல்வி–ஊராட்சி/நகராட்சி/அரசு/தொடக்க/நடுநிலைப் பள்ளிகளுக்கு இடைநிலை/பட்டதாரி ஆசிரியர் பணி நியமனம் செய்தது – பணி நியமன ஆணை பெற்று இதுநாள்வரை பணியில் சேராதவர்கள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் – சார்ந்து.

பார்வை:
1. சென்னை – 6, தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர் அவர்களின் கடிதம் ந.க.எண்.7425/ஆ4/2014, நாள் 27.08.2014.
2. சென்னை –6, தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.025400/டி1/2014, நாள் 30.08.2014, 01.09.2014 மற்றும் 25.09.2014ன்படி அனுப்பப்பட்ட சுற்றறிக்கைகள்.

-----

மேற்காண் பொருளின்மீது அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களின் அவசர கவனம் உடனடியாக ஈர்க்கப்படுகிறது.

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தொடக்கக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடைநிலை/பட்டதாரி பணிநாடுநர்களுக்கு கலந்தாய்வு மூலம் பணியிட ஒதுக்கீடும் சம்பந்தப்பட்ட மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களால் பணிநியமன ஆணையும் வழங்கப்பட்டுள்ள நிலையில், பணி நியமன ஆணை பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களில் சிலர் இன்னும் பணியில் சேராமலிருப்பதாகத் தகவல் பெறப்பட்டுள்ளது.

மேற்குறித்த நிலையில், பணி நியமன ஆணை பெற்றும் இதுநாள்வரை பணியில் சேராத இடைநிலை/பட்டதாரி ஆசிரியர்களுக்கு, அவர்கள் பணியில் சேராமைக்காக உரிய விதிகளின்படி காரணம் கேட்கும் அறிவிக்கை (Showcause Notice) அனுப்புமாறும், உரிய காலக்கெடுவிற்குள் பணியில் சேராவிடில், அவர்களது பணி நியமன ஆணை இரத்து செய்யப்படும் என குறிப்பிட்ட அறிவிக்கையில் குறிப்பிடுமாறும், 27.10.2014க்குள் பணியில் சேர அறிவுறுத்துமாறும் உடன் நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், காரணம் கேட்கும் அறிவிக்கை அனுப்பியும் குறிப்பிட்ட தேதிக்குள் பணியில் சேராதவர்களின் பணி நியமன ஆணையினை இரத்து செய்து ஆணையிடுமாறும், பணியில் சேர்ந்தவர்கள் மற்றும் பணி நியமன ஆணை இரத்து செய்யப்பட்டவர்கள் குறித்த விவர அறிக்கையினைத் தவறாமல் 30.10.2014க்குள் பதிவஞ்சலில் அனுப்பி வைக்குமாறும் அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொடக்கக் கல்வி இயக்குநர்

15/10/2014

பெறுநர்

அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள்

www.kalvikural.com